JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **92/2015** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 2** | Prosecution /Defence / Court | |
| Name | ஆறுச்சாமி என்கிற ஆண்டிச்சாமி | Village | |
| Father's Name | பழனிச்சாமி | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 24.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தற்போது ஈரோடு சந்தைக் கடை எதிரில் பார் வைத்து நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். நான் 2016 ம் ஆண்டு கந்தாம்பாளையம் பிரிவு அருகே பார் வைத்து நடத்தி வந்தேன். 28.11.2016 ம் தேதி காலையில் நான் கந்தாம்பாளையம் பிரிவு அருகே சென்று கொண்டிருந்த போது விபத்து வழக்கு சம்பந்தமாக பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலாவதாக மற்றொரு நபரும், இரண்டாவதாக நானும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** என்னுடைய பாருக்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் பார்க்கும் தொலைவில் உள்ளது. போலீசாருக்கும் எனக்கும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் போலீசார் என்ன செய்தார்கள் என்றால் வரைபடம் வரைந்தார்கள். இரத்தக் கறையையோ, டயர் மார்க்கையோ நான் பார்த்தேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை